

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அவர்கள் நேற்று முன்தினம் (9.92024) மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் யா.ஒத்தக்கடை ஊராட்சியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் அமைக்கப்பட்ட அரங்குகளை பார்வையிட்டார். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன். தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், மாநகராட்சி மேயர் திருமதி. இந்திராணி பொன்வசந்த், சட்டமன்ற உறுப்பினாகள் ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு). தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்ஷிணி செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி. சிங் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. மோனிகா ராணா, மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.சூரியகலா கலாநிதி, கிழக்கு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திருமதி.மணிமேகலை ஆகியோர் உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.92024) மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் யா.ஒத்தக்கடை ஊராட்சியில் தமிழ்நாடு முழுவதும் 31,220 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 3,74,777 மகளிர்க்கு ரூ.2874.26 கோடி மதிப்பீட்டில் வங்கிக் கடன் இணைப்புகளை துவக்கி வைத்து 1013 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.108 கோடி கடன் இணைப்புகளை வழங்கினார். இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், மாநகராட்சி மேயர் திருமதி. இந்திராணி பொன்வசந்த், சட்டமன்ற உறுப்பினாகள் ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு). தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்ஷிணி செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி. சிங், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. மோனிகா ராணா, மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி. சூரியகலா கலாநிதி, கிழக்கு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திருமதி.மணிமேகலை ஆகியோர் உடனிருந்தனர்.

## மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில்

# இந்தியாவிலேயே ‘திராவிட மாடல்’ அரசு முதலிடம்!

## மதுரையில் நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**மதுரை,செப்.11 –**

**மதுரை, யானைமலை, ஒத்தக்கடையில் அரசு நலத்திட்ட உதவிகள், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்குக் கடன் உதவி வழங்குதல் மற்றும் வீட்டு மனை பட்டா வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கினார்.**

**தமிழ்நாட்டில் உள்ள 31 ஆயிரம் 220 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 3 லட்சத்து 74 ஆயிரம் சகோதரிகளுக்கு ரூ.2 ஆயிரம் 874 கோடி மதிப்பிலான வங்கிக்கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த சாதனையின் ஒரு பகுதியாக, மதுரை மாநகரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், 1013 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த மகளிருக்கு ரூ. 108 கோடி மதிப்பிலான வங்கிக்கடன் இணைப்புகளை வழங்கினார்.**

**இதுவரை இல்லாத அளவுக்கு ஒரே மேடையில் 12 ஆயிரத்து 300 பேருக்கு வீட்டுமனை பட்டாக்களையும் வழங்கினார். மேலும், 15 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூபாய் 298 கோடி அளவுக்கு பல்வேறுத் துறைகளின் சார்பில், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:**

அமைச்சர் அண்ணன் மூர்த்தி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டது போல், இந்த யானை மலை ஒத்தக்கடைப் பகுதியில்தான் இதே இடத்தில் நான் கழகத்தில் பொறுப்பிற்கு வருவதற்கு முன்பே, 2018ஆம் ஆண்டு கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார்.

அதுமட்டுமல்ல, சென்ற ஆண்டும் இதே மதுரையில் கிட்டத்தட்ட 72 ஆயிரம் மகளிர் சுயஉதவிக்குழுப் பெண்களுக்குக் கடன் வழங்கும் நிகழ்ச்சியையும் சிறப்பாக நடத்திக் காட்டினார். இன்று இந்த நிகழ்ச்சியையும் ஒரு மாநாடு போல நடத்திக் காட்டியிருக்கிறார். மதுரை என்றாலே அண்ணன் மூர்த்தி அவர்கள்தான். மூர்த்தி அண்ணன் நிகழ்ச்சி என்றாலே அது ஒரு மாநாடு போன்ற நிகழ்ச்சிதான்.

### 12 ஆயிரத்து 300 பயனாளிகள்

மதுரையில் நடைபெறுகின்ற இந்த அரசு நிகழ்ச்சியில், 12 ஆயிரத்து 300 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களையும், 1,013 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 17 ஆயிரம் சகோதரிகளுக்கு, சுமார் 108 கோடி மதிப்பிலான வங்கிக்கடன் இணைப்புகளையும், பல்வேறு துறைகள் சார்பாக, 298 கோடி ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்குவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கான எனது பிரச்சாரத்தை இதே மதுரை மண்ணில்தான் துவங்கினேன். மதுரை மாவட்டத்தில் உள்ள மதுரை, விருதுநகர், தேனி மக்களவைத் தொகுதிகளுக்கெல்லாம் சென்று, உங்களையெல்லாம் சந்தித்து, வாக்கு கேட்டேன். இந்த மூன்று தொகுதிகளிலும் மிகப்பெரிய வெற்றியைத் தருவோம் என்று அப்போது நீங்கள் வாக்குறுதி கொடுத்திருந்தீர்கள். அந்த வாக்குறுதியை நிரூபித்து காட்டினீர்கள். அதற்கு இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 100 சதவிகித தேர்ச்சி

மாணவர்களுக்குத் தேர்வுகள் மூலமாக, ஆசிரியர்கள் மதிப்பெண்கள் போடுவார்கள். விளையாட்டு வீரர்களுக்குப் போட்டிகளின் மூலமாக நடுவர்கள் பாயிண்ட்ஸ் (புள்ளிகள்) கொடுப்பார்கள். அதுமாதிரி, ஒரு அரசு எப்படிச் செயல்படுகிறது என்பது, `தேர்தல்’ என்ற தேர்வின் மூலமாக மக்களாகிய நீங்கள்தான் மதிப்பெண்களைப் போடுவீர்கள். அந்த வகையில், நம் திராவிட மாடல் அரசிற்கான நற்சான்றிதழாக, சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் 40 க்கு 40 தொகுதிகளிலும் வெற்றிபெற வைத்து, 100 சதவிகித தேர்ச்சியை நம் திராவிட மாடல் அரசிற்கும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நீங்கள் அளித்து இருந்தீர்கள்.

இந்த வெற்றி, உங்களுக்காக இன்னும் கூடுதலாக உழைக்க வேண்டும். திட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்ற பொறுப்பை எங்களுக்கெல்லாம் அதிகப்படுத்தி இருக்கிறது. அதனால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், இன்று மதுரையில் இவ்வளவுப் பெரிய பிரமாண்டமான நலத்திட்ட நிகழ்ச்சியை, நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.



### உழவர் சந்தை, சமத்துவபுரம்

மதுரை மக்களுக்கு ஏராளமான திட்டங்களை, நம் அமைச்சர் அண்ணன் மூர்த்தி அவர்கள் முதலமைச்சரிடம் கேட்டுப் பெற்று உங்களுக்குக் கொண்டுவந்து சேர்த்துக் கொண்டிருக்கிறார். `உழவர் சந்தை’, `சமத்துவபுரம்’ போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன் ஆட்சிக் காலத்தில் இதே மதுரை மாவட்டத்தில்தான் தொடங்கினார்.

இன்று கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, 250 கோடி ரூபாய் மதிப்பில், கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை நம் முதலமைச்சர் அவர்கள் மதுரையில்தான் திறந்து வைத்தார்கள். அதேபோல், ஜல்லிக்கட்டுக்குப் பெயர்போன அலங்காநல்லூரில் 63 கோடி ரூபாய் மதிப்பீட்டில், `கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கமும்’ திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மதுரை மக்கள் மட்டுமல்ல, தென் மாவட்ட மக்கள் எல்லோருமே மகிழ்கின்ற அளவிற்கு மதுரையை நோக்கி ஏராளமான திட்டங்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன. இன்று நடைபெறுகின்ற, இந்த நிகழ்ச்சியில் ஏராளமான மகளிர் வந்திருக்கிறீர்கள்.

### பல்வேறு நலத்திட்டங்கள்

நம் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் இங்கு நிறைய அளவில் இருக்கிறீர்கள். இதேபோல் வீட்டு மனை பட்டா உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களைப் பெறுவதற்காகவும், பயனாளிகள் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். அரசின் சேவைகளைத் தேடிப்போய், நீங்கள் வாங்கிய காலம் போய் இன்றைக்கு அரசே உங்களைத்தேடி வந்து திட்டங்களையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

### வங்கிக்கடன் இணைப்பு

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு, தொழில் உற்பத்தி சந்தைப்படுத்துவதற்கான பயிற்சிகளை நம் அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. வங்கிக்கடன் இணைப்பைப் பொறுத்தவரை, ஒவ்வொரு வருடமும் முந்தைய வருடத்தைவிட, அதிகமாக வழங்கப்பட்டு வருகிறது. உதாரணத்திற்கு, சென்ற வருடம் 30 ஆயிரத்து 75 கோடி ரூபாய் வங்கிக்கடன் இணைப்பு வழங்கப்பட்டது. இந்த வருடம், அதை உயர்த்தி, 35 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக்கடன் இணைப்பு வழங்க எங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுவரைக்கும் 14 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கடன் இணைப்பு வழங்கியுள்ளோம். இன்றைக்கு மதுரையில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுக்க மொத்தம் 31 ஆயிரம் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 3 லட்சத்து 74 ஆயிரம் சகோதரிகளுக்கு 2 ஆயிரத்து 900 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கடன் இணைப்பை, இந்த நிகழ்ச்சியின் மூலம் வழங்கி இருக்கிறோம்.

இங்கு 12 ஆயிரம் பேருக்கு பட்டாக்கள், பல ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளையும் கொடுத்திருக்கிறோம். உங்களில் பலருக்கு வீட்டு மனை பட்டா பெறுவது என்பது, மிகப்பெரிய பிரச்சினை என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். பல ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்குகூட பட்டா இல்லை என்று பொதுமக்கள் தொடர்ந்து அரசின் கவனத்திற்கு எடுத்து வந்தீர்கள்.

### சட்டப்படி உங்களின் வீடு

இன்றைக்கு தமிழ்நாட்டின் பண்பாட்டு தலைநகர் மதுரையில் மட்டும், 12 ஆயிரம் பேருக்கு பட்டா கொடுத்து இருக்கிறோம். பட்டா வாங்கியிருக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் வீட்டில் இனி நிம்மதியாகத் தூங்கலாம். இன்றிலிருந்து உங்கள் வீடு சட்டப்படி உங்களின் வீடு. உங்களின் உரிமையை, நம் திராவிட மாடல் அரசு இன்றைக்கு நிலைநாட்டி இருக்கிறது.

> *“தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தலைநகர் மதுரையில் மட்டும், 12 ஆயிரம் பேருக்கு பட்டா கொடுத்து இருக்கிறோம். பட்டா வாங்கியிருக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் வீட்டில் இனி நிம்மதியாகத் தூங்கலாம். இன்றிலிருந்து உங்கள் வீடு சட்டப்படி உங்களின் வீடு. உங்களின் உரிமையை, நம் திராவிட மாடல் அரசு இன்றைக்கு நிலைநாட்டி இருக்கிறது.”*

மகளிரின் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டுமென்று, நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தந்து வருகிறார்கள். 2021ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளே முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்தே மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத்திற்கான திட்டம்தான். இன்று அந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுக்க உள்ள மகளிர் 520 கோடிப் பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, இந்த மதுரையில் மட்டும், 21 கோடிப் பயணங்களை நீங்கள் மேற்கொண்டு இருக்கிறீர்கள். மகளிர் சிரமப்படக் கூடாது என்பதற்காகவும், காலையில் குழந்தைகள் பசியோடு பள்ளிக்கூடத்திற்குச் செல்லக் கூடாது என்பதற்காகவும், நம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

கடந்த மாதம் அந்தத் திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்தார்கள். இதன்மூலம் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். இந்த மதுரை மாவட்டத்தில் மட்டும், ஒவ்வொரு நாளும் 80 ஆயிரம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

### 7 லட்சம் மாணவ, மாணவிகள்

`புதுமைப்பெண்’ என்ற திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவிகள் படித்து முடித்து, உயர்கல்வியில் சென்று சேரும்போது எந்தக் கல்லூரியாக இருந்தாலும், அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

அதேபோல், மாணவர்களுக்கு `தமிழ்ப்புதல்வன்’ திட்டம். இப்படி இந்த இரண்டு திட்டங்கள் மூலமாக ஒவ்வொரு மாதமும் 7 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இந்த மதுரையில் மட்டும் `தமிழ்ப்புதல்வன்’, `புதுமைப் பெண்’ திட்டத்தின் மூலமாக 15 ஆயிரம் மாணவர்கள் மாதந்தோறும் பயன்பெற்று வருகிறார்கள்.

### கலைஞர் மகளிர் உரிமைத்தொகை

எல்லாவற்றிற்கும் மேலாக, கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் என்ற சிறப்புக்குரிய திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த செப்டம்பர் மாதம் தொடங்கி வைத்தார்கள். இந்த ஒரு வருடத்தில் மட்டும், ஒரு கோடியே 16 லட்சம் மகளிர், மாதம் ஆயிரம் ரூபாய் என்று தலா 12 ஆயிரம் ரூபாய் வாங்கி இருக்கிறார்கள். இந்த மதுரை மாவட்டத்தில் மட்டும் 4 லட்சத்து 62 ஆயிரம் மகளிர், கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று இருகிறார்கள். இதுமாதிரியான திட்டங்களால், இன்றைக்கு தமிழ்நாட்டு மகளிர் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள். இன்றைக்கு இந்திய அளவில் வேலைக்குச் செல்கின்ற பெண்களில் 42 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். இதற்கு நம் திராவிட மாடல் அரசின் திட்டங்கள்தான் காரணம். ஒட்டுமொத்தமாக, கல்வியை எடுத்துக் கொண்டால், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் இன்று முக்கியமான இடத்தில் இருக்கிறது.

உயர்கல்வி சேர்கின்ற மாணவர்களின் சராசரி, இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதல் இடத்தில் இருக்கிறது. டாப் ரேங்கிங் இன்ஸ்ட்டிட்யூட் என்று சொல்லக்கூடிய உயர்கல்வி நிறுவனங்களைக் கொண்ட நம்பர் 1 மாநிலமாக இன்று, தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

அரசுப் பள்ளியில் படித்த 100க்கும் அதிகமான மாணவர்கள் இன்று ஐ.ஐ.டி, என்.ஐ.டி, ஐ.ஐ.எம் மாதிரியான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரோவிலும், சிலிக்கான் வேலியிலும் இன்றைக்கு உயர் பொறுப்புகளில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் சிறந்த பாடத்திட்டத்தைக் கொண்ட நம் தமிழ்நாடு கல்விமுறைதான்.

சமீபத்தில், முதலமைச்சர் அறிவிப்பு ஒன்று வெளியிட்டார். அரசுப் பள்ளியில் படித்து, வெளிநாட்டிற்கு உயர்கல்வி படிக்கச் செல்லும் மாணவர்களின் முதல் பயணச் செலவு, முதல் ஆண்டுக்கான முழுச் செலவையும் தமிழ்நாடு அரசே ஏற்கும் என்ற சிறப்பான அறிவிப்பை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தத் திட்டங்களின் காரணங்களால்தான் தமிழ்நாடு அரசு இன்றைக்கு வறுமை ஒழிப்பு, மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் இந்தியாவிலேயே நம்பர்1 இடத்தில் இருக்கிறது.

மாணவர்கள், மகளிர் அனைத்துத் தரப்பு மக்களின் நன்மைக்காக தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திற்காகவும் தொடர்ந்து உழைக்க, நம் திராவிட மாடல் அரசும், முதலமைச்சர் அவர்களும், நாங்களும் தயாராக இருக்கிறோம். நீங்கள் இந்த அரசிற்கு எப்போதும் உங்களின் ஆதரவைத் தர வேண்டும். ஆதரவு மட்டுமல்ல, இந்த அரசின் சாதனைகள் ஒவ்வொன்றையும், திட்டங்கள் ஒவ்வொன்றையும் நீங்கள் நாலு பேருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். எப்படி எங்களுக்கு, எங்கள் முதலமைச்சர் அவர்கள் பிராண்ட் அம்பாசிடரோ, அதேமாதிரி இந்த அரசின் பிராண்ட் அம்பாசிடர்களாக நீங்கள் ஒவ்வொருவரும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### உழைப்பின் மீது நம்பிக்கை

நம் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு ஒரேயொரு விண்ணப்பம். இன்று உங்களுக்குக் கொடுத்திருப்பது வெறும் கடன்தொகை கிடையாது. நம் முதலமைச்சர் அவர்கள் உங்கள் உழைப்பின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையாகத்தான், அதை நம் முதலமைச்சர் அவர்கள் பார்க்கிறார்கள். இந்த வங்கிக் கடன் இணைப்பைப் பெற்றுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் பெரும் தொழில் முனைவோராக உருவாக வேண்டும்.

நீங்கள் 4 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எந்தத் தயக்கமும் இல்லாமல், நீங்கள் தொழில்முனைவோராகிட துணிச்சலுடன் செயல்பட வேண்டும். உங்களுக்கு எல்லா வகையிலும், நம் கழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உங்களோடு துணை நிற்பார்கள். துணிச்சலோடு முன்னேறிச் செல்லுங்கள். வங்கிக்கடன் இணைப்பு மற்றும் அரசு நலத்திட்டங்களைப் பெற்ற அத்தனை பேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் பி. மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்ச்செல்வன், சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெங்கடேசன், பூமிநாதன், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திவ்யதர்ஷினி ஐ.ஏ.எஸ்., செயல் இயக்குநர் ஸ்ரேயா சிங் ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் சூர்யகலா கலாநிதி, மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார் ஐ.ஏ.எஸ்., கூடுதல் ஆட்சியர் மோனிகா ரானா ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாவட்டக் கழகச் செயலாளர் சேடப்பட்டி மணிமாறன், துணை மேயர் நாகராஜ், கழக முன்னனியினர், அரசு அலுவலர்கள் உள்பட பலரும் பங்கேற்றனர்.